போதனா விஷய பூங்கொத்து

மாதமொருமுறை மலரும்.



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
12 DEC 1941
MADRAS

Editor & Publisher:

Rev. Fr. A. LOURDUSWAMI, B.A., L.T.,

R. C. Secondary Training School, Trichinopoly.

கொத்து **32** **15** டிசம்பர் **1941** மலர் **6**

...முறை பாடசாலை, திருச்சினாப்பள்ளி.

தனிப்பிரதி அணா 1¼.

TL
ma21, N11PP
N41.32.6.
182460

BODHANA VISHAYA POONGOTHU
Magazine
of
Educational Topics & School Methods.

பொருளடக்கம் பக்கம்

1. பத்திராதிபர் குறிப்புகள் 153
2. எம் தாய் வாழ்த்து 155
3. சென்னை கல்வி இலாகா திருத்த விதிகள் ... 156
4. விஸ்தீரணம் போதித்தல் 158
5. எழுத்துக் கற்பித்தல் 161
6. விடுகதைகள் 161
7. பாடக் குறிப்பு 162
8. பள்ளிக்கூடங்களை அதிக வளர்ச்சியுள்ளதாக ஆக்குவது எப்படி? 164
9. உங்களுக்குத் தெரியுமா? 166
10. கிராமக் கல்விப் பிரசாரம் 2 167
11. யோசனைக் கணக்கு 169
12. குடிசைக் கைத்தொழில் (Cottage Industry) ... 170
13. சமையலறையில் கொலை 171
14. கிராம ஆசிரியரும்—ஓர் படிப்பில்லா ஸ்திரீயும் ... 175
15. சிறுவர்களுக்கான கதைகள் 177
16. யோசனைக் கணக்கு விடைகள் 178
17. பெற்றோர் சங்கம் 179
18. பிலிக்ஸ் தாயார் 181
19. நம் பாடசாலை நிகழ்ச்சிகள் 182
20. பாலர் சங்கீதம் 183
21. யோசனா விருத்திச் செய்யுள் 184

Imprimatur: ✠ JAMES,
Bishop of Trichinopoly.

Rates of Advertisement

PERIOD	HALF PAGE			FULL PAGE		
	Rs.	As.	Ps.	Rs.	As.	Ps.
1 Month	4	0	0	7	8	0
3 Months	11	0	0	20	0	0
6 Months	20	0	0	35	0	0
1 Year (11 Issues) ...	30	0	0	55	0	0

Editor & Publisher:
"BODHANA VISHAYA POONGOTHU" Trichinopoly.

ஏஜெண்டுகள் தேவை! ஏஜெண்டுகள் தேவை!!

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
12 DEC 1941
MADRAS

போதனை விஷயப் பூங்கொத்து

கொத்து 32] 15 டிசம்பர் 1941 [மலர் 6

பத்திராதிபர் குறிப்புகள்

நம் பாடசாலையில் சாரணீயம். சென்ற வருஷம்போல் இவ்வருஷமும் நம் பாடசாலைச் சாரணர்கள் தங்கள் முழுத் திறமையுடன் வேலைசெய்துவருவதைப் பாராட்டுகின்றோம். அதோடு இவ்வருஷத்தில் **புதுச்சாரணர்கள்** இந்த இயக்கத்தில் சேர்ந்து இதை வலுப்படுத்த முன்னணிக்கு வந்திருப்பது மெச்சத்தக்கதாகும். தற்சமயம் நம் பள்ளியில் 50 (ஐம்பது) சாரணர்கள் ஈடுபட்டு உழைப்பதற்குக் காரணம் நம் Scout master, Mr. பிச்சை பிள்ளையும் அவருடன் ஒத்து உழைக்கும் Sri கிருஷ்ண ராவ் அவர்களின் ஊக்கமுமேயாகும். அதற்கேற்ப, சில தினங்களுக்குமுன் இந்த நகரில் நடைபெற்ற “சாரணர் வாரத்தில்” நம்முடைய சாரணர்கள் தங்கள் சாமர்த்தியங்களைக் காட்டி வெகுமானம்பெற்றதும், சமீபத்தில் மே. த. சென்னை கவர்னர் அவர்கள் இன்னகரில் விஜயம் செய்தபோது, இவர்களும் ஏனையோரோடு ஒத்துழைத்துச் சேவை புரிந்ததும் இங்கு குறிப்பிடத்தகும்.

எனவே, இவர்கள் விடாமுயற்சியுடன் தங்கள் வாக்குறுதிகளை நிறைவேற்றிப் பொது ஊழியத்தில் ஈடுபட்டு, பொது மக்களின் நன் மதிப்பைப் பெறுவார்களாக.

* * *

ஆறுமாத ரிப்போர்ட்டு. நம் பழைய மாணவர்களிற் பலர் தங்கள் ஆறுமாத ரிப்போர்ட்டை அனுப்பிவருகின்றார்களாயினும், இன்னும் பலர் வாளாவிருக்கின்றனர். எனவே அத்தகையோர் இனி இந்த முக்கிய கடமையை ஒழுங்குபெறச் செய்வார்கள் என்று நம்புகிறோம்.

கேள்வி :—200 பச்சைமிளகாய்களை 3 பேருக்குப் பங்கிட்டால் ஆளுக்கு என்னவரும்?

விடை :—சீதபேதி, வயிற்றுக்கடுப்பு வரும்!

* * *

பார்வையாளர் (காட்சிசாலையில்)

"காகமும் வடையும்" என்ற கதையைவிளக்க வரைந்து இருந்த மரத்தைப்பார்த்து, "இது என்ன மரம் ஸார்?"

விளக்குபவர் : அதுதானே, சபைநடுவே நீட்டோலைவாசியா நின்றான் குறிப்பறிய மாட்டாதவன் நன் மரம். தெரியுதுங்களா?

* * *

உபாத்தியாயர் : பையா, நீ பகலிலேயே இப்படித் தட்டுத் தடுமாறி வாசிக்கிறாயே! இரவில் எப்படி வாசிப்பாய்?

பையன் : அப்படி எண்ணவேண்டாம். நான் இராப்பள்ளிக்கூடத்தில் படித்தவன்.

நூலகம்
182460
சென்னை-600 008

எம் தாய் வாழ்த்து

"எம். ஜி. ஜே."

அகவற்பா

என் பெருந்தாயே என்னிருவிழியே
அன்புருவான அறப்பெருந்துறையே
அன்னையைப் போற்றுதல் ஆனந்தமல்லோ
உன்னைத் துதியாது உறங்குவதெளிதோ
பூவினிலுதித்தாய் புகழுறவிடுத்தாய்
ஆவினிலரிய ஆசிரியர் பலரை
பல்கலை ஊட்டிப் பரிவுடன் ஆட்டி
வெல்லப் பாகென வேதங்கள் புகட்டி
ஒழுக்கமே அறிவு உழைப்பே திறமை
அழுக்குறு வாழ்வதே ஆசான் கடமை
இத்தகு மொழியால் எம்மை நிறப்பி
புத்தகப்படிப்பைப் புல்லென மதித்து
புலன்படு அறிவே பூரணமென்று
நலமுற தொழிற்கல்வி நவின்றனை மீண்டும்
பிரிவுண்ட மகர்க்குப் பிரியாதன்பினால்
புரிந்திடவல்ல போதனாமுறைகளைத்
திங்களும் கூட்டி நற்செம்மலராக
மங்கள நற்றுணர் மகிழ்ந்து விடுத்தனை
அத்திரு மலரை யாவருமண்டி
வித்தியாலாகா விடுமொழியறிந்து
உவப்புடன் பணிந்துநல் லுபதேசம் புகட்டி
வியப்புற ஒளிறுமுன் விளக்குகளல்லோ
இத்தனிச்சிறப்பை எடுத்துனக்கணிந்த
அத்தன்சீரடியை அணைந்தணைந்தேற்றிச்
சந்ததம் வாழச் சகமெலாந் தேறப்
பந்தமாய் நானே பரனை வேண்டுவேனே.

சென்னை கல்வி இலாகா திருத்தவிதிகள்

[Amendments to the Madras Educational Rules]

(G. O. M. S. No. 1726 Ed. d/7-11-'41, Page 846, Fort St. George Gazette d/18-11-'41).

Note (1) தொகுதி I-ல் (Group I) குறிப்பிட்டுள்ள வகுப்பினர் (அதாவது :—ஷெட்யூல்ட் வகுப்பினர்களின் ஜாபிதா—List of scheduled Castes) யாராவது கிறிஸ்துவ மதத்திலோ மற்றெந்த மதத்திலோ சேர்ந்துவிட்டாலும்கூட, அத்தகையோர்க்கு, சென்னை கல்விச்சட்டத்தில் கூறியுள்ளபடி ஷெட்யூல்ட் ஜாதியினர்க்குப் படிப்பு விஷயமாய் அரசாங்கத்தார் செய்து வரும் சகல அனுகூலங்களும் உண்டு. அதாவது சம்பளம் தள்ளிக்கொடுத்தல் கல்லூரிகளில் மேல்படிப்புக்கும் சம்பள வஜா முதலியன.

இதனல் ஷெட்யூல்ட் வகுப்பினர் பிற மதங்களில் சேர்ந்ததற்காக அவர்கள் படிப்பு விஷயமாய் அரசாங்கத்தாரது உதவிகளை இழக்கமாட்டார்கள் என்பதாம்.

* * *

கல்வியும் சர்க்காரும்

25-11-41-ல் ஈரோடில் நடந்த சிசு, கல்வி, சுகாதார வாரத்தைச் சென்னைக் கவர்னரின் ஆலோசனைத்துணைவர் (Adviser) Mr. T. Austin துரையவர்கள் திறந்துவைத்தபோது சர்க்கார் தற்போது கல்விமட்டில் கொண்டுள்ள நோக்கத்தையும் கொள்கையையும் எடுத்துக்கூறலானர். அதாவது, பொதுஜனக் கல்வி அபிவிருத்தி, தாழ்ந்த ஜாதியாரின் கல்வி அபிவிருத்தி, பெண்கள் கல்வி, எல்லா ஆசிரியர்களுடைய ஊழியமும் சம்பளமும் உயர்த்தப்படல் போன்ற ப்ரச்னைகளைப்பற்றியவையே.

அரசாங்கத்தார் 1940-ம் வருடம் ஜூலைமாதம் விடுத்துள்ள அறிக்கையைப்பற்றி ப்ரஸ்தாபித்து அதில் கண்டபடி உயர்தரக்கல்வியைத் திருத்தி அமைப்பதையும் IV-வது பாரத்துக்குமேல் இருபிரிவாகப்பிரித்துக் கல்வியளிப்பதையும் அமுலுக்குக்கொண்டுவர சர்க்கார் முயற்சிப்பதாயும் கூறினர். இக்கொள்கைக்கு எதிர்ப்புகள் இருந்தபோதிலும் அது பொதுமக்களின் ஆதரவைப் பெறுமலில்லை. பெருந்தொகையான மானேஜ்மெண்ட் பள்ளிக்கூடங்கள் இக்கொள்கையை ஆதரித்ததுடன் இத்திட்டம் அமுலுக்குவந்தவுடனேயே அதன்படி தங்கள் பள்ளிக்கூடங்களை மாற்றி அமைப்பதாக டைரெக்டருக்கு அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

சர்க்கார், தாழ்ந்த வகுப்பினர்களின் முன்னேற்றத்தை விரும்புகின்றனர் என்பதற்கு அத்தாட்சியாக எடுபட்டிருந்த சில பணஉதவிகளைத் (Educational concessions) திரும்பவும் அவர்களுக்குக் கொடுத்திருப்பதைக் காட்டினார். கிறிஸ்துவர்களாக மனந்திரும்பப்பட்ட ஆதிதிராவிட ஜாதியினருக்கு ஷெ உபகாரங்கள் கொஞ்சகாலத்திற்குமுன் நிறுத்தப்பட்டிருந்தவை இப்போது திரும்பவும் அத்தகையோர்க்கு அளிக்கப்பட்டுள்ளன. மகமதியர்களுக்கும், பெண்களுக்கும், தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கும், சில மலைநாட்டவர்க்கும் கொடுக்கப்படும் உபகாரச் சம்பளம் (Scholarship) அதிகமாகி இருக்கின்றது என்றும் எடுத்துரைத்தார். மேலும் அவர் கூறியதாவது :—

இந்த வருஷம் ரூ. 1,300,000க்கு மேற்பட்டதொகை அதிகப்படியாக ஆரம்பப்பாடசாலைகளின் கிராண்டு உதவிக்கு அளித்துள்ளார்கள்.

எய்டட் எலிமெண்டரி பாடசாலைகளின் ஆசிரியர்களின் முன்னேற்றத்துக்காக ஸர்க்கார் அதிகமாக முயற்சி எடுத்துவந்திருக்கிறார்கள். எய்டட் செக்கண்டரி பாடசாலைகளின் ஆசிரியர்களின் அதமபக்ஷமான சம்பளம் இவ்வளவுஎன்று தீர்மானப்படுத்தவும் அவர்களுடைய வேலைக்குத்தகுந்த ஆதரவு அளிக்கவும் ஒரு பிரச்சனை இருந்துவருகிறது. டிஸ்ட்ரிக்ட்போர்டு பள்ளிக்கூடங்களில் உள்ள ஆசிரியர்களின் சம்பளம் குறைக்கப்படக்கூடாதென்றும், கிரமமாகச் சம்பளம் பட்டுவாடா செய்யப்படவேண்டுமென்றும் தகுந்த காலத்தில் சம்பளம் உயர்த்தப்பட வேண்டும் என்றும் சர்க்கார் தீர்மானஞ்செய்துள்ளார்கள்.

“பெண்கல்வியைப் பரப்பவும் முன்னேற்றத்துக்குக் கொண்டுவரவும் அதிக முயற்சி எடுக்கப்பட்டுவருகிறது. கல்வியைப் பொருத்தமட்டில், அதுவும் முக்கியமாய் ஆரம்பக்கல்வியைமுன்னிட்டு, மற்ற மாகாணங்களைவிட அதிகமாய்ச் சர்க்கார் நம் மாகாணத்தில் செலவுசெய்கின்றனர்.

“தற்போது கல்விக்காகச் செலவுசெய்யும் பணம் நல்ல பலனைக்கொடுத்திருப்பது சர்க்காருக்கு மனத்திருப்தியளிக்கிறது. பொதுமக்களுக்கும் அது திருப்தியளிப்பதாகும்”

கடைசியாக, “கல்விக்காகச் செலவாகும் பணமெல்லாம் சர்க்காரே கொடுக்கமுடியாது. ஸ்தலஸ்தாபனங்களும் செல்வமுள்ள ஏனையவரும் உதவிசெய்யவேண்டும். இதை இப்போதாவது யாவரும் உணர்வார்களாக”.

விஸ்தீரணம் போதித்தல்

A. Antonimuthu,
Assistant, R. C. Training School, Trichy.

வஸ்துக்களின் நீளம், அகலம் முதலியவற்றை அளக்க உபயோகிக்கும் கருவிகள் அடிக்கோல், கெஜக்கோல் அளவு நாடா, அளவு சங்கிலி இவை நீட்டலளவைக் கருவிகள் ஆகும். வஸ்துக்களின் உருவங்கள் பலவகைப்படும். சதுரம், நீண்டசதுரம், முக்கோணம், பலக்கோட்டுருவம் இவற்றின் தள அளவை அதாவது பரப்பை அளவிட நீட்டலளவைக் கருவிகளை நேராக உபயோகப்படுத்த முடியாது. அதற்குச் சில உபாயங்கள் தெரிந்திருக்கவேண்டும். அப்போதுதான் அவற்றின் பரப்பைக் கணிக்க வழியேற்படும். நிலத்தின் விஸ்தீரணங்களை எவ்வாறு அளக்கிறார்கள். பரப்பளவை மூல சூத்திரத்தை உபயோகித்துத்தான் அளவிடுகிறார்கள். ஆகையால் இந்த வாழ்க்கைக்கு உதவியான விதியைப் பிள்ளைகளுக்கு வெகு ஜாக்கிரதையாக விளக்கித்தரவேண்டும். இப்போது சமசதுரம் நீண்ட சதுரம் இவற்றின் தொடர்பை அறிவிப்பது அவசியம். நான்கு பக்கங்களும் சமமாயும் நான்கு மூலைகளும் சமமாயும் நான்கு கோணங்களும் நேர்க் கோணங்களாகவும் (அதாவது 4 கோடுகளும் செங்குத்தாகவும்) உள்ள ஒரு நாற்கோட்டுருவம் சமசதுரம் எனப்படும். எதிர் எதிராயுள்ள இரண்டுபக்கங்களும் சமமாயும் நான்கு மூலைகளும் சமமாயும் நான்கு கோணங்களும் நேர்க்கோணங்களாகவும் உள்ள ஒரு நாற்கோட்டுருவம் நீண்ட சதுரம் ஆகும். இவற்றைப் பிள்ளைகளுக்குக் காகிதம் மடித்துக் கத்தரித்துக் காண்பிக்கலாம்.

இப்போது இரண்டு நீண்ட சதுரங்களை எடுத்துக்கொள்ளலாம். ஒன்று $5'' \times 3''$ அளவு இருக்கட்டும். மற்றொன்று $8'' \times 2''$ இருக்கட்டும். அவற்றுள் எது பரப்பில் பெரியது என்ற கேள்வியைப் பிள்ளைகளுக்குக் கொடுத்தால், அவர்கள் சரியான விடை சொல்லுவதில் தயங்குவர். இதிலிருந்து மூல அளவின் அவசியத்தையும் பயனையும் விவரிக்கலாம். இவற்றின் பரப்பை ஒப்பிட 1" அளவுள்ள சமசதுரம் இருப்பது அவசியம். அதாவது ஒரு சதுர அங்குலம். ஒரு அங்குல நீளம் ஒரு அங்குல அகலம் உள்ள சமசதுரம் அதாவது 4 பக்கங்களும் 1" நீளமுள்ள உருவம் சமசதுரம் ஆகும். இதனை மூல அளவாகக்கொண்டால் இரண்டு நீண்ட சதுரங்களின் பரப்பைக் கணித்துவிடலாம்.

முதலாவது உருவத்தின் பரப்பு 15 சதுர அங்குலம்; 2-வது உருவத்தின் பரப்பு 16 சதுர அங்குலம்; இதிலிருந்து 2-வது உருவம் பெரியது என்பது தெரிகிறது. மூலசூத்திரம் நீளத்தில் முறையே 5 அங். சதுரங்கள்; 8 அங். சதுரங்கள்; அகலத்தில் முறையே 3 அங். சதுரங்கள்; 2 அங்குல சதுரங்கள் இவற்றை முறையே எப்படிச் செய்தால் 15 சதுர அங்குலங்கள், 16 சதுர அங்குலங்கள் ஆகும். (பெருக்கினுல் ஆகும் என்ற உத்தரம் தெளிவாகும்). 15 சதுர அங்குலம் $=5\times3$; 16 சதுர அங். $=8\times2$. இதிலிருந்து விஸ்தீரணம் (பரப்பு) = நீளம் × அகலம் என்ற மூல சூத்திரம் நிரூபிக்கப்படுகிறது. இதனைச் சம்பந்தப்படுத்திச் சில உண்மைகள் விளக்கப்படவேண்டும். (உ.-ம்) 1 அங்குல நீளம், 1 அங்குல அகலமுள்ள உருவம் சமசதுரம். இதனை 1 சதுர அங்குலம் என்றும், 1 அங்குலச் சதுரம் என்றும் சொல்லலாம். 2 அங்குல நீளம், 2 அங்குல அகலமுள்ள உருவம் 2 அங்குலச் சதுரம் 4 சதுர அங்குலம். 3 அங்குல நீளம், 3 அங்குல அகலம் உள்ள உருவம், 3 அங்குலச் சதுரம், 9 சதுர அங்குலம். 1 அடி நீளம், 1 அடி அகலம் உள்ளது, 1 அடிச் சதுரம், 1 சதுர அடி. 1 அடிக்கு 12 அங்குலம் ஆகையால் ஒரு சதுர அடி $=12''\times12''=144$ சதுர அங்குலம். 1 கெஜ நீளம், 1 கெஜ அகலமுள்ளது, 1 கெஜ சதுரம், 1 சதுர கெஜம். 1 கெஜத்திற்கு 3 அடி ஆகையால் 1 சதுர கெஜம் $=3'\times3'=9$ சதுர அடி. இவற்றிலிருந்து பரப்பளவை வாய்ப்பாட்டை அடியிற் காட்டியபடி ஸ்தாபிக்கலாம்.

144 சதுர அங்குலம் = 1 சதுர அடி.
9 சதுர அடி = 1 சதுர கெஜம்.
4840 சதுர கெஜம் = 1 ஏகர் } நில அளவைக்குரிய
100 செண்டு = 1 ஏகர் } மூல அளவைகள்.

நீண்ட சதுரங்களின் விஸ்தீரணம் கணித்தல் மாதிரிக் கணக்குகள்

(1) ஒரு அறையின் நீளம் 48 அடி, அதன் அகலம் 24 அடி, அந்த அறையின் விஸ்தீரணம் எவ்வளவு?

(அறையின்) பரப்பளவு = நீளம் × அகலம்
= 48×24
= 1152 சதுர அடி
= 128 சதுர கெஜம்.

(2) ஒரு தோட்டத்தின் நீளம் 80 அடி, அதன் விஸ்தீரணம் 4800 சதுர அடி. அத்தோட்டத்தின் அகலம் கணிக்க.

தோட்டத்தின் பரப்பளவு = நீளம் × அகலம்.

அகலம் = பரப்பளவு ÷ நீளம்

= 4800 சதுர அடி ÷ 80 அடி

$$= \frac{4800 \text{ ச. அ.}}{80 \text{ அ.}} = 60 \text{ அடி.}$$

(3) ஒரு அறையின் நீளம் அகலத்தைப்போல் 3 மடங்கு; அதனகலம் 20 அடி; அந்த அறையின் விஸ்தீரணம் கணிக்க.

அகலம் = 20 அடி.

நீளம் = 3 மடங்கு அகலம்.

= 3 × 20 அடி = 60 அடி.

பரப்பு = நீளம் × அகலம்

= 60 அடி × 20 அடி = 1200 சதுர அடி.

(4) ஒரு கலியாணப் பந்தலின் நீளம் 75 அடி; அகலம் 56 அடி. அந்தக் கலியாணப் பந்தல் தரையில் பூராவும் ஜமக்காளங்கள் விரிக்கப்பட்டிருக்கின்றன. ஒரு ஜமக்காளத்தின் நீளம் 6 அடி, அகலம் 4 அடி என்றால் அந்தப் பந்தலின் தரையில் பரப்ப எத்தனை தனி ஜமக்காளங்கள் வேண்டும்?

பந்தலின் நீளம் = 75 அடி

பந்தலின் அகலம் = 56 அடி

∴ பந்தலின் விஸ்தீரணம் = நீளம் × அகலம்
= 75 அடி × 56 அடி
= 4200 சதுர அடி.

1 ஜமக்காளத்தின் நீளம் = 6 அடி

1 ஜமக்காளத்தின் அகலம் = 4 அடி

∴ ஒரு ஜமக்காளத்தின் விஸ்தீரணம் = நீளம் × அகலம்
= 6 அடி × 4 அடி
= 24 சதுர அடி.

பூரா ஜமக்காளத்தின் மொத்த விஸ்தீரணம் = 4200 ச. அடி
(பந்தல் தரையின் விஸ்தீரணம் பூரா ஜமுக்காளத்தின் விஸ்தீரணமாகும்).

1 ஜமக்காளத்தின் விஸ்தீரணம் = 24 சதுர அடி.

வேண்டிய தனி ஜமக்காளங்கள் = 4200 ÷ 24 = 175.

எழுத்துக்கற்பித்தல்

M. A. S. Udayar, *T. P.*

தமிழ் என்ற சொல்லுக்கு இனிமை, அழகு முதலிய பல அர்த்தங்களைக் கற்று வல்ல ஆன்றோர் கூறுவர். அதன் பொருள், காரணம், ஆட்சி, எடுத்தாளப்பட்ட இடம் முதலியன கூறுதல் எமது நோக்கமன்று. பொருளாழமும் இலக்கிய இலக்கணச் சிறப்பும் உச்சரிப்பதற்கேற்ற ஒலியியலும் பெற்றுத் தோன்றும் நம் தண்டமிழ் மொழியைக் கற்கப் புகுவார்க்குக் கையாளப்படும் எழுத்துக் கற்பிக்குமுறையையே ஈண்டு எமது ஆராய்ச்சிக்கு எடுத்துக்கோடும்.

தமிழெழுத்துக்கள் பண்டைநாளில் நெடுங்கணக்கு அல்லது அரிச்சுவடி என்ற பெயரால் சாரியை சேர்த்துக் கற்பிக்கப்பட்டு வந்தது. அன்றியும் அக்காலத்தில் தமிழெழுத்துக்கள் அனைத்தும் அர்த்தமுறையைக் கவனியாது பாடம்பண்ணவும் எழுதவும் கற்பிக்கப்பட்டு வந்தன. அதனால் அவ்வெழுத்துக்களை முற்றுறக் கற்பதற்கே சாதாரண அறிவுள்ள மாணவகர்க்கு இரண்டு அல்லது அதற்கு அதிகமான ஆண்டுகளும் தேவையாயிருந்தன. ஏனென்றால் பொருள் விளங்காததும் சுவை தெரிதற்கியலாதது மான எழுத்துக்களைப் பாடம் செய்தலும் அவற்றின் வடிவங்களை மனத்தில் அமைப்பதும் சிற்றறிவினையுடைய சிறார்க்கு எளிதன்று. ஆதலால் அவ்வெழுத்துக் கற்பதையே ஒரு பாரமாக மாணவகர் கருதினர். ஆயினும் இம்முறையால் நேர்ந்த நன்மை தீமைகளை பின் ஆராய்வோம்.

விடுகதைகள்

G. Rajanayagam

1. பாரிலே குடியிருக்கும் தேரையுமல்ல
பண்புடனே தீயுமுண்டு அணலுமல்ல
நீரிலே நீந்திவரும் தாராவுமல்ல
நீண்டதொரு நாக்குமுண்டு பாம்புமல்ல
நாரிலே கட்டிவரும் புஷ்பமுமல்ல
நாடெல்லாம் சுற்றிவரும் வெய்யோனுமல்ல
நண்பர்களே விடையதனை நவின்றுடுவீரே !

2. நான்கெழுத்துப் பூடு நடுவே நரம்பிருக்கும்
காலும் தலையும் கடைச்சாதி—அதில்
ஒட்டும் முதலெழுத்தும் ஓதும் மூன்றும் எழுத்தும்
விட்டால் பரமனுக்குவீடு விளம்புவீரே !

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
12 DEC 1941
MADRAS

பாடக் குறிப்பு

சரித்திர பாடம் (நான்காவது வகுப்பு)

முகமதுநபி

நோக்கம் :—பிள்ளைகள் கால உணர்ச்சியையும், சரித்திரம் உண்மையானது, வெறும் கட்டுக்கதையல்ல என்பதையும், அதைப் படிப்பதில் ஓர் தனி பிரீதியையும் அடையவேண்டும் என்பதேயாம்.

பீடிகை :—அரேபியா படத்தைத் தயாரித்து, அதை மாணவர்களுக்குக் காட்டி சம்பாஷித்தல்.

பாடவிளக்கம் :

1. அரேபியா என்பது ஆறுகள், ஏரிகள் ஒன்றுமில்லாத ஓர் உலர்ந்த பிரதேசமாகும். மணல் வெளிகள் அநேகம் இருக்கின்றன. அரிதாக சில இடங்களில் ஊற்றில் அல்லது கிணற்றில் தண்ணீர் இருக்கும். சிலசில இடங்களில் புல் தரைகள் காணப்படும். ஆதிகாலத்தில் அங்கு காட்டு மிராண்டிகளான மக்கள் வசித்து வந்தனர். அவர்கள் ஆடு மாடுகளை வைத்துக்கொண்டு புல்லுக்காகத் தேசம் எங்கும் அலைந்து திரிந்தார்கள். அவர்கள் மூர்க்கர்கள். எப்பொழுதும் சண்டை போட்டுக்கொண்டே இருப்பார்கள்.

2. கிறிஸ்து பிறந்த ஏறக்குறைய 600 வருஷங்களுக்குப் பிறகு அரேபியாவில் முகமதுநபி என்ற ஒரு தீர்க்கதரிசி பிறந்தார். அரேபியர்களுடைய தீய நடத்தையைக்கண்டு பெரிதும் வருந்தினர். நல்ல பழக்க வழக்கங்களை ஏற்படுத்த முயற்சித்தார். ஒருவரோடொருவர் சண்டை செய்வதும், விக்கிரக ஆராதனை நடத்துவதும் கூடாதென்று சொன்னர். கடவுள் ஒருவரே என்று போதித்தார்.

3. சிலர் இவருடைய போதனைக்கு இசைந்து இவருடன் சேர்ந்தனர். மற்றவர்கள் இவரை விரோதித்துச் சண்டை செய்தார்கள். ஆனல் முகமதுநபியின் சிஷர்கள் விரோதிகளைக் கொன்று வெற்றிக்கொண்டார்கள். பிறகு கி. பி. 632 முகமதுநபி இறந்துபோனர்.

4. முகமதுநபி செய்த போதனைகளைத் திரட்டி "கொரான்" என்ற புஸ்தகத்தைச் செய்தார்கள். இந்தக் கொரான் புத்தகத்தை மகமதியர்கள் தங்கள் வேதமாகக்கொண்டாடுகிறார்கள். அவர்களின் வேதத்திற்கு மகமதீயம் அல்லது இஸ்லாம் என்று பெயர். இஸ்லாம் என்பதற்கு அமைதி அல்லது சமாதானம் என்று அர்த்தம்.

முறை: உபாத்தியாயர் பீடிகையாக முதல் முதலில் இந்தியாவிலுள்ள, அல்லது கிராமம் அல்லது நகரத்திலுள்ள முக்கிய மதங்களைப்பற்றிப் பேசுதல். (இங்கு மத துவேஷத்திற்கு சிறிதும் இடம் தருதல்கூடாது.) முதலில் இந்து மதமும், பிறகு கிறிஸ்துவ மதமும், அதன் பிறகு மகமதிய மதமும் உண்டான வகையைப்பற்றிச் சொல்லுவதால் பிள்ளைகளுக்கு இது முந்தியது இது பிந்தியதென்று காலத்தை நிர்ணயிக்கக்கூடிய தன்மை ஏற்படும். அக்டோபர் மாதம் 23ம் தேதி நமக்கு விடுமுறை நாளாயிருந்தது. ஏன்? அன்று முகமதியர்களின் திருவிழாவாகிய ரம்சான். இவ்வித திருநாட்களை ஏற்படுத்தியவர்கள் முகமதியர்கள். எனவே இன்று முகமதியர்களின் தலைவராகிய முகமதுநபியைப்பற்றிப் படிப்போம் என்று பாடம் தொடங்குதலோடு நமது நோக்கத்தையும் வெளியிடலாம்.

இன்று இந்தியாவிலுள்ள முக்கிய மதங்களில் மகமதிய வேதம் மூன்றாவதாக இருக்கின்றது, இந்த வேதத்தை ஸ்தாபித்தவர் முகமதுநபியாவார், என்ற இதுபோன்ற விவரங்களையும், அவ்வேதத்தின் கொள்கைகளையும், இம்மதம் ஏற்படுவதற்கு முன் அரேபியர்கள் இருந்த அநாகரீகத்தையும், இன்று அவர்களிடம் உலாவும் நவநாகரீகத்தையும் எடுத்து ஓதுவதால், ஒரு வேதத்தின் ஆரம்பத்தாலோ அல்லது மத புரட்சியாலோ வாழ்வில் மாறுதல்கள் ஏற்படக்கூடும், ஏற்பட்டு இருக்கின்றன என்ற உணர்ச்சியை பாலர்களிடம் உண்டாக்கலாம்.

பிறகு மற்ற மதத்திலுள்ள உத்தம புருஷர்களுடன் முகமதுநபியை ஒப்பிட்டு அவர் தன் நாட்டிற்கும் தன் சமயத்திற்கும் செய்த அரிய தியாகத்தைப் போதித்து அவ்வாறே ஒவ்வொருவரும் தன் தன் வேதத்திற்கும், சமூகத்திற்கும் உழைக்கவேண்டும் என்ற நீதியைப் புகட்டலாம்.

கடைசியாக ஒரு மாணவனை புத்தகத்திலுள்ள நபிநாயகத்தின் பாடத்தை வாசிக்கச் செய்தல். மற்றும் சிலரையும் படிக்கச் செய்தல். அப்பியாசம்:—

(a) முகமதிய மதம் எப்பொழுது உண்டானது?
(b) அரேபியர்களின் குணங்கள் யாவை?
(c) முகமதுநபியின் கொள்கை யாது?
(d) எந்த வருஷத்தில் அவர் இறந்தார்?
(e) முகமதியரின் வேத புஸ்தகத்தின் பெயர் என்ன?
(f) முகமதிய வேதத்திற்கு வேறு பெயர் யாது?
(g) இஸ்லாம் என்ற சொல்லுக்கு அர்த்தம் யாது?

பள்ளிக்கூடங்களை அதிக வளர்ச்சி உள்ளதாக ஆக்குவது எப்படி?

G. Ignacimuthu

நல்ல மணமும், வர்ணமும், அழகும் தேனும் உள்ள புஷ்பங்களை எவ்வாறு தேனீக்கள் ஆவலோடு நாடி பறந்து அப்புஷ்பங்களை நுகர வருகின்றனவோ, அதேபோல் பிள்ளைகளும், பெற்றோர்களும், மற்றோர்களும் தேன்போன்ற பாடசாலையை விரும்பிச்செல்லவேண்டும். ஆகையால் பள்ளிக்கூடங்களை நாம் எவ்வாறு அமைத்தால் அதிக வளர்ச்சியடையுமென்றும் என்பதைப்பற்றிச் சிறிது ஆராய்வோம்.

1. பாடசாலையின் வெளிக்கவர்ச்சி

பாடசாலைக் கட்டிடங்களை அதிக அழகாகவும், சுகாதார முறைப்படி தென்திசைப் பார்த்த வாசற்படியுடனும், வேண்டிய பெரிய ஜன்னல்களுடனும் அதன் முன்புறம் பலவிதப் புஷ்பங்கள் அமைந்த செடிகளையுடைய தோட்டத்தையுண்டாக்குவதுடன் பின்பக்கத்தில் சௌகரியமாய் ஓடியாட சௌகர்யமாய் விளையாட விளையாட்டுஸ்தலங்களை அதிகச் சுத்தமாய் அமைத்துப் பள்ளியின்மேல் கவர்ச்சிசெய்வதுடன் பிள்ளைகட்கும் மனோசக்தி, ஒற்றுமை, கூட்டுறவு, கடவுள் பக்தி, ஜாதிபேதமின்மை, தேசாபிமானம் முதலிய நற்குணங்களை உண்டாக்கவேண்டும்.

2. பள்ளிக்கூட உள் கவர்ச்சி

பள்ளிக்கூட பாலர்களை எப்போதும் சந்தோஷமாகவும், உற்சாகமாகவும், உற்றுநோக்கும் சக்தியை விருத்திசெய்யவும், ஆசிரியர்கள் சொல்வதை மனதில் கிரகிக்கவும் ஆசிரியர்கள் கற்பிக்கவேண்டும். அதாவது ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் கீழ் கண்ட பிரகாரம் ஒவ்வொரு பாடங்களையும் உபகரணத்துடன் கற்பித்தலாம்.

1. கணக்குகள் சம்மந்தமான உபகரணங்கள்.

2. சரித்திரம் பூகோளம் இவைக்கு வேண்டிய உபகரணங்கள் அல்லது சார்ட்டுகள் (Charts).

3. இயற்கைப்பாடம் கற்பிக்கப் பலநிற பூக்கள், பலவித செடிகள், பலவிதப் பறவைகள், பல வர்ணப் பூச்சிகள் பல மிருகங்கள் உள்ளவை இப்படிப்பட்ட செயற்கைப்படங்கள் வைத்துக் கற்பிக்கலாம். கூடுமானவரை தோட்டத்திற்குக் கொண்டு

போய் அங்கு காணப்படும் இயற்கைப் பொருள்களைக்கொண்டும் கற்பிக்கலாம்.

4. சுகவாழ்விற்கு ஆதாரமான சுகாதாரப் படங்கள்.

5. நீதிகளை விளக்கும் சுகாதாரச் சித்திரங்கள்.

6. அதிகப் பொருள்செலவின்றி உபாத்தியாயர்களும் மற்றோர்கள், பிள்ளைகளின் பெற்றோர்களும் இனமாகத் தந்த பொருள்களைக்கொண்டு பொருட்காட்சிசாலையும் புத்தகசாலையும் ஒன்று ஏற்படுத்தி இருக்கவேண்டும். மேலும் சமாச்சாரப் பத்திரிகைகளை வரவழைத்துப் படிக்கச்செய்யவேண்டும்.

7. விசிறி, வலை, பாய், நூல்நூற்றல், புக்பைண்டிங் முதலிய கைத்தொழிலுள்ள பாடங்கள்.

உபாத்தியாயர் தான் ஒரு ஆசிரியர் என்றுகருதி குறித்த நேரத்தில்மட்டும் பள்ளிக்கூடம் போவதும், வருவதுமாயிருந்தால் அவர் உண்மையான ஆசிரியரென்று எண்ணமுடியாது. அப்படி நடக்கிற ஆசிரியரும் பாடசாலையும் விருத்தியடைய மாட்டாது.

ஒரு ஆசிரியர் தானும் ஒரு சிறுபிள்ளையாகப் பாவித்து, பள்ளிச் சிறுவர்களுடன் சேர்ந்து சந்தோஷமாகப் பாடங்களைக் கற்பிப்பதும், விளையாடவுமாயிருக்கவேண்டும். ஆசிரியர் அதிகாலையில் எழுந்து மாணவர்களின் பெற்றோர்களைக்கண்டு அவர்களின் குழந்தைகளின் படிப்பு நடத்தை முதலிய விஷயங்களையும் கூறி அவ்வாசிரியருடன் ஒவ்வொரு பெற்றோர்களும் பழகி இருக்கவேண்டும். பெற்றோர்கள் சங்கம், மாணவர்சங்கம், வாலிபர்சங்கம் நிறுவவேண்டும். அதில் வாரம் [or] மாதம் 1 முறைப் பற்பல விஷயங்களைப் பேசவும், பலபெரியார்களைக் கொண்டு தேசாபிமானத்தை ஊட்டவும்வேண்டும். சுகாதார அதிகாரிகளை வரவழைத்தும் ஒளிச்சித்திரப் படத்தின்மூலமாயும் சுகாதாரவிதிகளைப் போதிக்கவேண்டும். பல நீதிகளைப் புகட்டக்கூடிய சரித்திரங்களை மாணவர்கள் நடித்தல் வேண்டும்.

ஆகவே ஆசிரிய சகோதரர்கள் இவ்வாறு நடத்திவருவார்களானால் பெற்றோர்கள் சந்தோஷத்தோடு தங்கள் சிறுவர்களையும் சிறுமிகளையும் பள்ளிக்கு அனுப்புவார்கள். பள்ளிக்கூடங்களும் வளர்ச்சியடையும்.

உங்களுக்குத் தெரியுமா ?

பறவைகள் எவ்வாறு வழி அறிகின்றன ?

பறவைகள் கோடைகால மாரிகால வீடுகளுக்குப் பிரயாணஞ் செய்யும்பொழுது தங்கள் கூரியபார்வை, இயல்பூக்கம், இவைகளை வழித்துணையாகக் கொண்டு பறந்து செல்லுகின்றன. நிலப்பரப் பின்மீது பறக்கையில் பறவைகள் கடற்கரையோரங்கள், ஆறு கள், இன்னும் தெற்றன விளங்கும் பிறமார்க்கங்களை சாத்திய மானபோதெல்லாம் பின்பற்றிச் செல்லுகின்றன. ஆண்டு தோறும், அகன்ற நீர்ப்பரப்பைக் கடந்துசெல்லவும், மீண்டும் அதே சமீப பிரதேசங்களை வந்து அடையவும் பறவைகளின் "இவ்வியல் பூக்கம்" அவைகளுக்கு ஆற்றல் அளிக்கிறது. பறவை கள் தேசாந்திரம் செல்லும்பொழுது இரவில், வெகு உயரத்தில் அநேகமாக எப்பொழுதும் மணிக்கு 40 முதல் 100 மைல் வேகத் தில் பறந்து செல்லுவது வழக்கம். தன் வேகத்தையே காரணப் பெயராகக் கொண்ட "வேகவதி" (Swift) என்னும் பறவை காலநிலை அநுகூலமாயிருப்பின் மணிக்கு 100 மைலுக்கு அதிகம் கூடபறந்து செல்லும்.

கண்ணாடி செய்வது எப்படி ?

கண்ணாடி செய்வதற்கு மூலப்பொருளாயிருப்பது, 'ஸிலிகா' என்ற வஸ்துவாகும். மணலில் ஸிலிகா இருக்கிறது. ஆகவே கண்ணாடி செய்வதில், மணல், மற்றும் சில பொருள்களுடன் கலந்து உபயோகிக்கப்படுகிறது. பல்வேறுவகையான கண்ணாடி களுக்குப் பலபல விதமான மணல் வேண்டியதிருக்கிறது. குவாட் ஒருவகையான ஸிலிகா. குவாட் மணல், துண்டு, கண்ணாடி, மேஜைக் கண்ணாடி கண் கண்ணாடி முதலியன செய்வதற்கு உபயோகிக்கப்படுகிறது. மணல் நன்கு கழுவி உலர்த்தப்பட்ட தும், சிறிது பெரிதாயில்லாமலிருக்க சலிக்கப்படுகிறது ; பின்னர் மற்றும் சில பொருட்களையும் அதனுடன் சேர்த்து அடுப்பில் உருக்கப்படுகிறது. குளிரவைக்கும் வேலை மிக மிக முக்கியமானது ; ஏனெனில் உருக்கப்பட்ட ஸிலிகா மெதுவாக குளிர வைக்கப்பட்டால், கீரல்களும், உடைப்புகளும் ஏற்பட்டு விடும். எகிப்து தேசத்திலே கண்ணாடி சுமார் 4,000 வருஷங் களுக்கு முன்னரே செய்யப்பட்டு வந்தது. ஆயினும் நமது நாட்டில் இன்னும் இத்தொழில் விருத்தியடையக் காணோம்! என்ன விந்தை !

கிராமக் கல்வி பிரசாரம் 2.

A. A. Muthu

"வாருங்கோ, வாத்தியாரே! தாங்களும் குறித்தநேரத்தில் வந்துவிட்டீர்கள். இப்படி உட்காருங்கள். நேற்றயத்தினம் போல் இன்றும் பற்பல சந்தேகங்களைக்கேட்டுத் தெரிந்து கொள்ள ஆசிக்கின்றோம். தயைசெய்து எங்களது ஆசையைப் பூர்த்திசெய்வீர்களா?"

"ஆஹா! அதுவே எனது ஆசை. ஒருவிதத்தில் கடமை யுங்கூட. எனக்குத் தெரிந்தவரையிலும் பதில்சொல்லி முடிக் கிறேன். தாராளமாய்ச் சொல்லுங்களய்யா உங்கள் சந்தேகங் களை."

1. கிராம: ஏனய்யா, வாத்தியாரே! எங்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கனுப்பவேண்டும். அவர்கள் படிக்கவேண்டும். என்று தினந்தோறும் எங்களை தொந்தரவுபண்றீங்களே; இவர்கள் படிப்பதால் என்ன பிரயோசனம்? இவர்கள் படித்து உத்தியோ கம் பார்ப்பதென்ன கெட்டுப்போய்விடுமா, எங்கள் பயிர்த் தொழிலை ஒழுங்காய்ச் செய்தால் போதாதா?

2. கிராம: மேலும் இந்தக்காலத்தில் படித்தவர்களே வேலையில்லாமல் திண்டாடுவது எங்களுக்கென்ன தெரியாததா? எனது சொந்தக்காறரொருவர் தன் சொத்துக்களையெல்லாம் விற்று மகனை பி. ஏ. வரையிலும் படிக்கவச்சார். பாவம், இப்ப வேலையில்லாமே ரொம்ப கஷ்டப்படுறாங்க. பிழைப்புக்கே வழி யில்லை. பையனுக்கு குனிந்து வேலைசெய்வது மதிப்புக்குறை வென்று நினைத்துக்கொள்கிறான். 'மெத்தப்படித்தவன் சுத்தப் பயித்தியக்காரன்' என்பது இவனுக்குத்தான்செல்லும்...இப் படியிருக்கும்போது எங்கள் பிள்ளைகள் படிச்சு என்னபிரயோ சனம்?

ஆசிரி: ஐயா! கிராமத்தாரே! நான்சொல்வதைச் சற்றுக் கவனமாய்க் கேளுங்கள். உத்தியோகம் பெறுவதற்காகவே படிக்கவேண்டும். படிப்பவர்கள் எல்லாம் உத்தியோகம்பெற வேண்டும். உத்தியோகம் பெறாதவன் படித்தும் அவனது படிப்பு பயனற்றது என்ற தப்பபிப்பிராயம் எங்கும் பரவிவரு வதே நம் நாட்டின் ஏழ்மைநிலைக்கு ஓர் முக்கியகாரணம்.

உத்தியோகம் பெறுவோர்க்குமாத்திரந்தான் கல்வி அல்ல. கல்வி யாவருக்கும் உரியது. எல்லோரும் தங்களால் கூடிய அளவு கல்விகற்கவேண்டும். கல்வி மானிடரின் உரிமைப்பொருள்களில் ஒன்று. மக்கள் தங்கள் வாழ்க்கையை செவ்வனே நடத்துவதற்கான திறமையைப்பெறுதல் அவசியம். இத்திறமை கல்வியின்மூலம் மக்கட்குக் கிடைக்கிறது. இவ்வுலகில் நாமடையக்கூடிய செல்வங்களுள் கல்வியே தலைசிறந்தது. கல்வியின் கனியே அறிவு. இவ்வறிவைக்கொண்டு திரண்ட திரவியத்தையும் அரும்பெரும் புகழையும் இன்பத்தையும் அடையலாம். இத்தகைய மேலானஅறிவை கல்வியினாலன்றி மற்றெந்த செல்வங்களாலும் அடையமுடியாது.

எனவே உங்கள் பிள்ளைகளும் உலகப்போக்கையொட்டி, தங்கள் வாழ்க்கையைத் திறம்படநடத்தி சந்தோஷமாயும் சௌக்கியமாயும் வாழுவதற்குக் கல்வி அறிவு அவசியம். சுருங்கச்சொல்லின் எல்லோருக்கும், எத்தொழிலைச் செய்வதற்கும் கல்வி அறிவு அவசியம்.

1. கிராம: எத்தொழிலுக்கும் என்கிறீர்களே, விவசாயம், வியாபாரம் செய்பவர்கள்கூடவா படித்திருக்கவேண்டும்?

ஆசிரி: ஐயா! பயிர்த்தொழில் முதலிய எந்தக்காரியங்களுக்கும் படிப்பறிவுவேண்டும். நம் நாட்டினரில் பெரும்பான்மையோற் படிப்பறிவில்லாதவர்களாயிருப்பதனால்தான் விவசாயம், வியாபாரம் இப்படி க்ஷீணித்துப்போயிருக்கிறது. வருஷ முழுவதும் பாடுபட்டு அரைவயிற்றுக் கஞ்சிக்குத் திண்டாடுகிறார்கள். இயற்கை வளமிகுந்த நம்மிந்திய நாட்டில் வறுமைத்தனம் தாண்டவமாடுகின்றது. ஊண், உடையின்றி மடிவோர் பலகோடி. அகால மரணத்திற்குள்ளாவோர் அனந்தம்...ஏன்? நம்நாட்டினரென்ன? சோம்பேறிகளா? உழைப்பதற்கு அஞ்சுபவர்களா அல்லது நம் நாடுதான் செழுமைகுன்றியநாடா பின் ஏன்? விவசாயம், வியாபாரம் செய்கிறார்கள். கஷ்டப்பட்டு உழைக்கிறார்கள். ஆனால் அவ்வுழைப்பு பயனற்றதாகிவிடுகிறது. அறிவீனம், என்னும் நோய் விழுந்து அவ்வரும்பெரும் உழைப்பை சர்வநாசம் செய்துவிடுகிறது. பண்டையகால முறைப்படியே தங்கள் தொழில்களைச் செய்துவருகிறார்கள். அப்படியானல் நம் முன்னோர் கையாடிவந்த முறைகளெல்லாம் ஏற்றவைகளன்று என்றுநினைத்துவிடாதீர்கள். அக்காலத்திற்கு அவைகள் மேலானமுறைகளே. ஆனால் நவீன நாகரீகமிகுந்த

இக்காலத்திலோ மக்களின் தேவைகள் அதிகரிக்கின்றது. எனவே தேவைக்குத்தக்கபடி வருமானமும் அதிகரிக்கவேண்டும். ஆகையால் தங்கள் தொழில்களைச் சீர்பெற நடத்தவேண்டும். காலத்திற்கேற்றபடி முன்னேற்றமானமுறையில் பயிர்த்தொழிலை செய்வதற்குக் கல்வி அறிவு அவசியம்.........

கிராம: ஐயா, கொஞ்சம் பொறுங்கள். பயிர்த்தொழிலுக்குக் கல்வி அறிவு அவசியம் என்கிறீர்கள். நாங்களென்ன படித்தவர்களா? அல்லது எங்களது மூதாதைகள்தான் படித்தவர்களா? படிக்காதவர்களாகிய நாங்களும்தானே இத்தொழிலை செய்துவந்திருக்கிறோம்?

ஆசிரி: நம் முன்னோர்மேல் நான் குறைவாகப் பேசுகிறதாக நீங்கள் நினைக்கவேண்டாம். அவர்களும் பயிர்த்தொழிலை ஒழுங்காய்த்தான் நடத்திவந்தார்கள். நல்லபலனை அடைந்தார்கள். ஆனால் கல்வியறிவுடன் கூடிய உழைப்பு இருந்தால் அவர்களைவிட மேலானபலனை அடையலாம் என்பதுதான் எனது தீர்மானம். இங்கிலாந்துபோன்ற மேல்நாடுகளில் தொழிலாளிகளே பெரிய முதலாளிகள். அவர்களே செல்வந்தர்கள். ஏன்? தொழிலாளிகளெல்லாம் படித்தவர்கள். காலத்திற்கேற்றபடி தங்கள் தொழிலை மேலானவிதமாய் நடத்திப் பெரும் வருமானத்தை அடைகின்றனர். தெருக்கூட்டும் தோட்டிமுதலாய் சமாச்சாரப் பத்திரிகை வாசிக்கிறான் என்றால் வேறென்னசொல்லக்கூடும்......சரி நேரமாகிறது. அடுத்தநாள் எனது ஓய்வு நேரத்தில் தவறாமல் இங்கு வருகிறேன். பயிர்த்தொழில்செய்ய கல்வி எவ்வவ்விதங்களில் உபயோகப்படுகிறது என்பதைப்பற்றி சம்பாஷிப்போம். இப்போது நான் சென்றுவருகிறேன். வந்தனம்.

கிராம: நல்லதய்யா. சென்றுவாருங்கள்.

யோசனைக் கணக்கு

ஓட்டமற்ற தண்ணீரில் மணிக்கு $4\frac{1}{2}$ மைல் வீதம் செல்லக்கூடிய ஒரு படகு மணிக்கு $1\frac{1}{2}$ மைல் வீதம் நீரோட்டமுள்ள ஒரு ஆற்றில் கொஞ்சதூரம் தண்ணீரோடும் அதேதூரம் தண்ணீரை எதிர்த்தும் மொத்தம் 1 மணி 45 நிமிஷத்தில் சென்றது. என்றால் மொத்தம் எத்தனை மைல் அப்படகு சென்றது.

K. Srinivasan

குடிசைக் கைத்தொழில் (Cottage Industry)

மிஸ் சி. ருக்மணி

வாழைப்பழ குல்கந்து (Banana Jam)

இதற்குரிய பழங்களில் மலையாளத்தில் அகப்படும் நேத்திர வாழைப்பழமே சிறந்தது. இது தயார் செய்வதற்கு அதிக தேர்ச்சி தேவையில்லை. இவை செய்து விற்போமானால் தகுந்த லாபம் கிடைக்கும். ஆனால் நம்மவர்கள் குடிசைத் தொழில் செய்வதென்றால் பெரிய அகௌரவமென்று கருதுவது வருந்தத் தக்கதேயாகும்.

நேத்திர வாழைப்பழத்தில் சுமார் $\frac{3}{4}$ பாகம் தண்ணீர் இருக்கிறது. இந்த ஜலத்தை முதலில் பழத்தினின்று அப்புறப்படுத்த வேண்டும். பதமான நற்பழங்களைப் பொறுக்கி ஒரு தட்டையான இரும்புப் பாணியில் இட்டு புரட்டிப்புரட்டி வதக்கவேண்டும். பழத்தோல் மெதுவாக ஆகும்வரை மேற்படி பக்குவம் தேவை. பின்னர் அதனை அடுப்பினின்று இறக்கித் தோலை உரித்துவிடவும். பின்னும் சில நார் போன்ற வஸ்து தங்கியிருக்குமாயின் அதனையும் அப்புறப்படுத்தவேண்டும்.

பின்னர் இப்பழங்களை உரலில் போட்டு நன்றாக ஆட்டி வெண்ணெய்போலான பின் ஒருசுத்தமான பாத்திரத்தில் எடுத்து வைத்துக்கொண்டு, ஆட்டிஎடுத்த மொத்தையில் கால்பாக அளவு சர்க்கரை எடுத்து அடுப்பிலிட்டுக் காய்ச்சி கெட்டியான பாகு செய்வதவசியம்.

இப்பாகுவினுடன் முன் ஆட்டிவைத்திருந்த வாழைப்பழ மொத்தையை சேர்த்து, வாசனைக்காக சிறிது ஏலக்காய், கிராம்பு, முதலிய அவரவர்க்கு பிடித்த ஏதாவதொரு வாசனைச் சாமானைக் கலந்து மறுபடி அடுப்பிலிட்டுக் காய்ச்சவேண்டும். குல்கந்து தயாராகும்பொழுது இடை, இடையே கிளறவேண்டும். சிறிது தேனும் சேர்க்கலாம். மெழுகுபோல் வரும்சமயம் இறக்கி விட வேண்டும்.

சர்க்கரைப்பாகும், வாசனைசாமானும் குல்கந்து கெடாதபடி பாதுகாக்கின்றதோடல்லாமல் ருசியும், மணமும் அளிக்கின்றது. ஆனால் இது நான்குமாதம்முதல் ஆறுமாதம்வரை கெடாதிருக்கும்.

இதனைக் கண்ணாடிப் பாத்திரங்களில் அழகிய லேபில் ஒட்டி பாக் செய்து நகரங்களிலுள்ள சிற்றுண்டிச்சாலைகளுக்கும், ஐக்கிய நாணய சங்கங்களுக்கும் அனுப்பி பவுண்டு ஒன்று 6-8 அணா வீதம் விற்பனை செய்யச் சொல்லலாம். இதனால் நல்ல லாபம் கிடைக்குமென்பது என் நம்பிக்கை.

‘ சமயலறையில் கொலை ’

N. R. Thiruvengadam

“ ஐயோ ! கொலை ! கொலை ! படுகொலை !! இது என்ன எடுத்தவுடன் பெரிய வெடிகுண்டு போடுகிறீரே என்று விழிக்கிறீர்களா ? கொலை எங்கே ! எப்பொழுது என்றவைகளை அறிய ஆசைப்படுகிறீர்கள் அல்லவா ? ஆம் கொலை-சந்தேகமே இல்லை. படுகொலை எங்கு ? உங்கள் சமையலறையில்தான். என்ன, என்ன, நமது சமையலறையிலா ? என்று மூர்ச்சித்து விழுந்து விடாதீர்கள்.

நான் சொல்லப்போகும் கொலை தினசரி நமது சமயலறைகளில் சர்வசாதாரணமாக நடைபெறுவது. ஆதலால் நீங்கள் உங்களை அலட்டிக்கொள்ளவேண்டிய அவசியமில்லை. நமது சமயலறையில் கொலை நடப்பதென்றால் யார் இதைச் செய்யக்கூடும் ? ஒன்று நமது தாய்மார்கள் அல்லது சமையல்காரர்களாகத்தானே இருக்கவேண்டும் ? ஆம் இவர்கள் இருவருமேதான் அக்கொலைக்காரர்கள். என்ன ஆச்சரியம் ! தாய்மார்களாவது கொலை செய்பவாவது ? போமய்யா போம். சுத்த் பைத்தியம் என்கிறீர்களா என்னை ? இதோபாருங்கள் சாட்சிமூலம் அதை ருஜுப்பிக்கிறேன். அப்புறம் தெரியும் யார் பைத்தியம் என்று !

நமது தாய்மார்களும், சமையல்காரர்களும் ஜீவசத்துள்ள (Vitamins) பதார்த்தங்களைச் சரிவர சமைக்காமலும் சரிவர கையாளத் தெரியாமலும் அச்சீவசத்துக்களை கொலைசெய்துவிடுகிறார்கள். மற்றும் பதார்த்தங்களை அஜாக்கிரதையாகக் கையாளுதல், ஒழுங்கீனமான பாதுகாப்புமுறை, வெகுகாலத்திற்கு சேமித்துவைத்தல் முதலியவைகளாலும் உயிர்ச்சத்துக்கள் கொலைசெய்யப்படுகின்றன.

மனித தேக வளர்ச்சிக்கு ஆதாரமாயுள்ள ஜீவசத்துப் பொருள்களில் A. B. C. D. என்ற நான்கும் தலைசிறந்தது. ஆதலால் இந்த நான்குவகை ஜீவசத்துப் பொருள்களும் (Vitamins) எவ்வாறு நிர்மூலமாக்கப்படுகின்றன என்பதையும் அவைகளைச் சேதமின்றி எங்ஙனம் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பவைகளையும் ஆராய்வோம் !

முதலாவதாக A என்ற ஜீவசத்துப்பொருள் (Vitamin) வெண்ணை, முட்டை, பச்சைக் காய்கறிகளில் அதிகம் காணப்படும்

182460

இந்த ஜீவசத்து தேகத்தை நோய்க்கிடங்கொடாமல் காப்பதுடன் கண், காது, சுவாசாசயம் (Lungs) சுரப்பிகள் (glands) இவைகள் சரிவர வேலைசெய்ய ஆதாரமாயுள்ளது. இத்தகைய ஜீவசத்து நமது சமயலறைகளில் பெரும்பாலும் அடியோடு அழித்தேவிடப்படுகிறது எனலாம். அஃது எப்படியெனில் காய்கறிகளை வாடிவதங்கி விடுவதன்மூலமும், அடிக்கடி கைபடுவதின் மூலமும், சில காலத்திற்கு காய்கறிகளைச் சேகரித்து வைப்பதின்மூலமும் இச்சீவசத்து அகற்றப்பட்டு விடுகிறது. கத்திரி வெண்டை, கொத்தவரை, வாழைக்காய், பூசனிக்காய் முதலியவைகளை வாடவிடுவதால் பாதி ஜீவசத்துக்கள் இழக்கப்படுகின்றன. வெண்ணையைக் காய்ச்சுவதால் $\frac{1}{4}$ பாகம் சத்து போய்விடுகிறது.

ஆகவே 'A' ஜீவசத்துப்பொருளைத் தக்கபடி பயன்படுத்த விரும்புவோர் (1) காய்கறிகளை கூடியவரை புதிதாக உபயோகித்தல் (2) அதிகமாக கைபட்டு கசங்கியிருக்கும் காய்கறிகளை வாங்காது விடுதல் (3) அதிகநேரம் 'சளபுள' வென வேகவைக்காமல் சீக்கிரம் பக்குவப்படுத்தல் (4) அதிக உஷ்ணத்தைக் கிளப்பும் பதார்த்தங்களைத் தவிர்த்தல் என்ற இந்நான்கு விதிகளையும் அநுசரிக்கக்கடவர். இது நம்மால் முடியுமா? முடியாதா?

அடுத்தபடியாக 'B' என்ற ஜீவசத்தை எடுத்துக்கொண்டால் இது தேகத்தின் நரம்பு சதை வளர்ச்சிக்கு ஆதாரமானது. இது அரிசி, கோதுமை, அவரை, பலவித கொட்டைகள், கிழங்கு முதலிய பொருள்களில் அதிகமாக காணப்படும். பாலிலும் இச்சத்துப்பொருள் இருக்கிறது. பாலைக்கறந்தவுடன் பித்தளைப் பாத்திரத்தில் வைத்திருக்கும் சொற்ப நேரத்தில் 10 முதல் 20% சத்துப்பொருள் நீங்கிவிடுகிறது. விலைக்குவாங்கின பாலானல் அது நம்மிடம் வந்துசேருமுன் சுமார் 45% சத்துப்பொருளை இழந்துவிடுகிறது. பிறகு அதை நாம் கண்ணை மூடிக்கொண்டு இரண்டு, மூன்று கொதிவரும்வரை கொதிக்கவைக்கிறோம். இப்பொழுது சுமார் 139°F. உஷ்ணநிலையடைகிறது. பால் 70°F. க்கு அதிகமாக காய்ச்சினல் அதிலுள்ள சத்துப்பொருள் முழுதும் அகற்றப்படுகிறது. ஆகவே நாம் சாப்பிடும் பாலில் உள்ள ஜீவசத்துக்கள் அவ்வளவும் கொலைசெய்யப்பட்டனவல்லவா?

இதேபோன்று சீமை அவரை (French beans) யுடன், சோடாமாவுசேர்த்து வேகவைக்கும்போது சுமார் 54% 'B' ஜீவசத்து கொல்லப்படுகிறது. ஆனல் சோடா சேர்க்காமல் வேக

வைப்பதால் இந்த நஷ்டம் பாதியாகக்கூடும். பாசிப்பயிரை தண்ணீரில் வேகவைப்பதால் சுமார் 10% 'B' ஜீவசத்து இழக்கப்படுகிறது. அதிகம் தண்ணீர் ஊற்ற ஊற்ற இந்த நஷ்டம் இருமடங்காகும். கோதுமைமாவை சூடாக்குவதால் (Baking) அதிலுள்ள சத்தில் $\frac{1}{7}$ பங்கு 'B' ஜீவசத்து இழக்கப்படுகிறது.

இங்ஙனம் இழக்கப்படும் 'B' ஜீவசத்தை சேதமாகாது பயன் படுத்தல் எவ்வாறு? (1) பச்சைப்பயிர், மொச்சைக் கொட்டை, கொள்ளு இவைகளை வேகவைத்தநீரை கீழே கொட்டி விடாமல் கூடியவரை பயன்படுத்துக. (2) சோடாஉப்பை, காய்கறி பதார்த்தங்களை தயாரிப்பதில் உபயோகிப்பதை நீக்குக. இது நம்மால் ஆகாத பிரமாதமான காரியமா?

இனி மனிதவளர்ச்சிக்கு ஆதாரமான 'C' என்ற ஜீவசத்துப் பொருளை பார்ப்போம். இச்சீவசத்து பால், ஆரஞ்சு, எலுமிச்சை, கீரை வகைகள் இவைகளில் காணப்படும். பாலைக் காயவைப்பதனாலும், பித்தளைப் பாத்திரத்தில் வைப்பதினாலும், விலைக்கு வாங்குவதாலும் ஏற்படும் ஜீவசத்து நஷ்டத்தை முன்னரே கூறினேன். ஆனால் பச்சைப்பாலில் இச்சத்து முழுதும் இருக்கிறது. நவீன முறையில் பாலைக்காய்ச்சுவதிலும் (Pasteurization) கூட ஏறக்குறைய பாதிஜீவசத்து இழக்கப்படுகிறது. இந்த 'C' ஜீவசத்துப்பொருளானது பழங்களை நீண்டகாலத்திற்கு வைப்பதினாலும், பதார்த்தத்தை நீண்டநேரம் சமைப்பதினாலும் வெகுவாக இழக்கப்படுகிறது. உருளைக்கிழங்கு வேகவைப்பதில் சுமார் $\frac{2}{5}$ பங்கு சத்து இழக்கப்படுகிறது. டின்களில் அடைக்கப்பட்டிருக்கும் பழங்கள், ஆப்பிள்கள், பால் இவைகள் சுமார் 50% ஜீவசத்தை சொற்பகாலத்திலேயே இழந்துவிடுகின்றன. மெருகுதாளில் (Wax Paper) பதனம் செய்யப்பட்ட பால் சுமார் 4 மணிநேரம் வெயில்பட்டால் அதிலுள்ள பாதிஜீவசத்து இழக்கநேரிடும். கண்ணாடிப் பாத்திரத்திலுள்ளதை வெய்யிலில் வைக்க 75%ம் பச்சைக் கண்ணாடிப் பாத்திரத்திலுள்ளது 25%ம் மண்ணிறமான கண்ணாடிப் பாத்திரத்தில் உள்ளது 15%ம் இச்சத்தை இழக்கிறது. ஆகவே 'C' ஜீவசத்தை குளிரவைத்துப் (Refrigeration) பொருட்கள் கெடாது பாதுகாப்பதினாலும் (2) சீக்கிரம் பொருட்களைக் குளிரச்செய்வதாலும் (Rapid freezing) (3) சீக்கிரம் சமைப்பதினாலும் (Rapid cooking) (4) உப்புகலந்த நீரில் பதார்த்தங்களை வேகவைப்பதினாலும் (5) பதார்த்தங்களை வேகவைக்க அதிக தண்ணீர் சேர்க்காதிருப்பதாலும் (6) பழங்களைப் பறித்தவுடன் உண்பதினாலும் (7) கடைகளில் பளபள

வெனக்காணப்படும் பழங்கள் அதிகம் கைபட்டு, கைபட்டு இச் சீவசத்துவை இழந்திருப்பதால் அவைகளை வாங்காது நிறுத்துவதாலும் இச்சிறந்த ஜீவசத்தானது அழியாமல் காக்கப்படுகிறது. D வைடமின் சூரிய வெளிச்சத்தின் மூலமாய்க் கிடைக்கிறது.

ஆகவே நமது சமையலறையில் நிகழக்கூடிய மேற்கூறிய அசம்பாவித ஜீவசத்துக் கொலைகள் ஏற்படாதிருக்க நாம் பொதுவாகக் கீழ் காண்பவற்றை அனுசரித்தல் போதுமானது.

1. அதிகம் கைப்படாததும், புதியதுமான காய்கறிகளையும், பழங்களையும் உபயோகிக்க.

2. அவைகளையும் உடனே உபயோகிக்க. நீண்டநாள் வைத்திருக்காதே.

3. வேகமாக சமைத்துச் சீக்கிரமாகச் சாப்பிடு.

4. பயிறு, கொள்ளு, மொச்சை முதலியவற்றை வேகவைத்தநீரில் சத்துப்பொருள் இருப்பதால் அவைகளையும் சாப்பிடுவதில் சமயோசிதம்போல் உபயோகிக்கவும்.

5. காய்கறிகளைப் பக்குவப்படுத்த ஒருபோதும் சோடா உப்புப் போடாதே.

6. பாலைக் கூடியவரை கறந்தவுடன் சாப்பிடு.

7. புட்டிப்பால், டின்களில் அடைக்கப்பட்ட பழங்கள் இவைகளைவிட அப்போதைக்கப்போது கிடைக்கும், பழங்களும், பாலும் உபயோகி.

8. அதிகத் தண்ணீர்விட்டு பதார்த்தங்களை வேகவைக்காதே.

9. பதார்த்தங்களை வேகவைக்கும்போது உப்புப்போடு.

உங்கள் ஆகாரவிஷயத்தை நீங்கள் கவனித்து இவ்விதம் நடைபெறச்செய்தால் நீங்கள் திடகாத்திரராக வாழலாம். இதற்குக் காசு செலவில்லை. கொஞ்சம் கருத்தும் கவனமும்வேண்டும். அவ்வளவுதான்.

சமையலறையில் ஏற்படக்கூடிய இதைக்கவனியாமல் சக்கையை நீங்கள் சாப்பிடுவதென்றால் இதைக் 'கொலை' என்று சொல்லாமல் வேறென்னவென்று சொல்வேன்?

கிராம ஆசிரியரும்—ஓர் படிப்பில்லா ஸ்திரீயும்

(S. அந்தோனி உபாத்தியாயர், போர்டு Ad. பாடசாலை, அரியூர்.)

பெண் : ஏங்கோ வாத்தியாரே, ஊடு ஊடா ஆணுபொண்ணு அள்ளாம் வெகரமா எளுதிரிங்களே எண்ணத்துக்குங்கோ ?

உபாத்தியாயர் : வருஷந்தோறும் ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள ஆண் பெண் முதலிய ஜனத்தொகை கணக்கை நாங்கள் மேலதிகாரிகளுக்கு அனுப்பவேண்டும். அதற்காகத்தான்.

பெண் : போன வருசம் இப்புடி ரொம்ப வெகரமா அள்ளாத்தையும் எளுதிலே போளே இருக்குங்களே ?

உபா : ஆமாம் ! இவ்வருஷம் புதுமாதிரியாகக் கணக்கெடுக்கும்படி மேலதிகாரிகளின் உத்திரவு.

பெண் : ஜெர்மங்காரெங்க வந்து குண்டு கிண்டு போடும்படி இள்ளிங்களே ?

உபா : இல்லை, இல்லை பயப்படவேண்டாம். இது வருஷா வருஷம் எடுக்கக்கூடிய சென்சஸ் கணக்கு.

பெண் : அத்தாணுங்களே, வேறொண்ணும் இள்ளிங்களே.

உபா : இல்லை, இல்லை.

பெண் : அப்பிடின்னு எம்பேரு இடும்பிங்கோ, ஏ மவபேரு மருதாயி, ஏ மவேங்பேரு மாயாண்டி, எங்கூட்டுகாரவுங்கபேரு நாஞ் சொல்லப்புடாதுங்கோ.

உபா : பரவாயில்லை சொல்லுங்கள்.

பெண் : பூவிந்தி கடையிளே குச்சி, குச்சியா நீளமா இருக்குங்களே அதுங்கோ.

உபா : ஓமப்பொடியா ?

பெண் : இள்ளே, இள்ளெங்க ; இன்னுங் கொஞ்ச பெருசா இணுத்துக்கெடக்குங்க.

உபா : ஓகோ ! சேவா !!

பெண் : ஆமாங்கோ, ஆமாங்கோ, அத்தாங்கோ.

உபா : சரி, உங்கள் குழந்தை மருதாயியைப் படிக்கவிடுங் கள்.

பெண் : என்னு சொள்ரிங்கோ, ஏக்குவிளங்கலே.

உபா : உங்கள் மகளைப் பள்ளிக்கூடத்திற்கு அனுப்புங்கள்.

பெண் : எண்ணத்துக்குங்கோ ?

உபா : கல்வி கற்க ; எழுத வாசிக்கக் கற்றுக்கொள்ள.

பெண் : ஆமா ! பொட்டச்சி படுச்சுதானு உத்தியம் ஆளப் போரு !

உபா : உத்தியோகம் ஆள அல்ல ; பெண்களும் ஆண்களைப் போல் எழுத வாசிக்கவாவது படித்திருந்தால்தான் தங்கள் வாழ்க்கையைச் சரிவர நடத்தவேண்டிய அறிவு ஏற்படும். ஆண்களுடன் எல்லா நல்வகையிலும், ஒத்துழைப்பார்கள். தங்கள் பிள்ளைகளையும் படிக்க வைப்பார்கள். ஒரு வீட்டில் புருஷன் மாத்திரம் படித்திருந்து மனைவி படிப்பில்லாத முட்டாளாயிருந்தால் இருவரும் தங்கள் குடும்ப வாழ்க்கையை கடவுளுக்கும், அரசாங்கத்திற்கும், பொது ஜனங்களுக்கும் சிறந்தவர்களாக நடத்த முடியாது. ஒருவர் மேட்டுக்கு இழுத்தால் மற்றொருவர் பள்ளத்துக்குத்தான் இழுப்பார். நீங்கள் படிக்காததால்தான் இப்படி எல்லாம் கேட்கிறீர்கள்.

பெண் : சரிங்கோ, பொம்பிளே படிக்கிறதும் நல்லதுதாங் இண்ணு தெரிஞ்சுகிட்டங்க. அப்படின்னு ஆவுட்டுங்கோ பாப்போம். போயிட்டு வாங்க.

சிறுவர்களுக்கான கதைகள்

சிறு பறவையின் கதை

G. Ignacimuthu

ஒரு சிறு பறவை ஒரு சிறு முள் செடியில் வசித்துவந்தது. அதன் சிறகு ஒடிந்துபோனது. அது ஒரு தென்னைமரத்தினடியில் பறந்துபோனது. "தென்னைமரமே மழைகாலம் வருகிறது. என் சிறகு ஒடிந்துபோனது. நான் வசிக்க இடந்தருவாயா?" என்று பறவை கேட்டது. "நான் தரமாட்டேன்" என்று தென்னைமரம் சொன்னது.

அப்போது சிறுபறவை ஒரு பனைமரத்தினிடம் பறந்துபோனது. "பனைமரமே மழைகாலம் வருகிறது. என் இறகு ஒடிந்துபோனது. நான் வசிக்க இடந்தருவாயா?" என்று கேட்டது. "நான் தரமாட்டேன்" என்று பனைமரம் சொன்னது.

அப்போது சிறுபறவை ஒரு மாமரத்தின் அருகில் பறந்துபோனது. "மாமரமே, மழைகாலம் வருகிறது. என் இறகு ஒடிந்துபோனது. நான் வசிக்க இடம்தருவாயா?" என்று சிறுபறவை கேட்டது. "நான் தரமாட்டேன்" என்று மாமரம் சொல்லிவிட்டது.

அப்போது சிறுபறவை ஒரு ஆலமரத்தினருகில் பறந்துபோனது. "ஆலமரமே, மழைகாலம் வருகிறது. என் இறகு ஒடிந்துபோனது. நான் வசிக்க இடம்தருவாயா?" என்று கேட்டது. "நான் இடந்தருகிறேன் சிறுபறவையே உன் மூக்கினால் அழகிய கூட்டைக்கட்டவா" என்று ஆலமரம் கேட்டது. உடனே சிறுபறவை "ஆம்" என்றுசொல்லி அதில் அழகிய கூட்டைக்கட்டினதும் பெரிய மழைபெய்தது. பெரிய காற்றும் அடித்தது. தென்னைமரம் இரண்டாக ஒடிந்தது. பனைமரத்தின்மேல் இடி விழுந்தது. மாமரம் வேரோடு கீழே விழுந்தது. ஆலமரத்துக்குமட்டும் ஒரு மோசமும் வரவில்லை.

ஆகையால் கஷ்டப்படுகிறவர்களுக்கு உதவிசெய்யவேண்டும்.

யோசனைக் கணக்கு விடைகள்

(கொத்து 32, மலர் 5, பக்கம் 144.)

I. நத்தை 13 நாளில் ஏறிவிடும்.

ஷை விடையளித்தவர்கள்: 1. George Sydney. 2. K. Rajaraman. 3. S. Arokiasawmy, Teacher, Labour School, Komagudi. 4. A. Irudayam, Head master, R. C. School, Annamangalam, (Perambalur). 5. M. Rathinagiri Gounder, Lab. School, Dhoolipatti.

II. விளம்பரப்படுத்தப்பட்டிருந்த தொகை ரூ. 255.

ஷை விடையளித்தவர்கள்: 1. Rajaram. 2. George Sydney. 3. P. S. Savarimuthu, H. M. Lab. School, Kottaiyur, Musiri Range.

III. பின்னம் $\frac{7}{25}$.

ஷை விடையளித்தவர்கள்: 1. K. Srinivasan. 2. S. Arokiasamy, Komagudi. 3. A. Irudayam, Annamangalam.

Bp. K. Rajaram & Co.

வகைகளை இதனடியிற் காண்க.

I. நத்தை 13-வது நாளில் ஏறிவிடும். Ans.

தினம் நத்தை ஏறுவது 3 அடி. இறங்குவது 2 அடி. ஆகவே தினம் 1 நாளில் 1 அடி ஏறுகிறது. அதேபோல் 12 தினத்தில் 12 அடி ஏறுகிறது. 13-ம் நாள் வழக்கம்போல் 3 அடி ஏறினவுடன் கம்பத்தின் உச்சியை அடைந்துவிடுகிறது. ஏறினவுடனே இறங்குவதற்கு அதற்கென்ன பைத்தியமா!

II. விளம்பரப்படுத்தப்பட்டிருந்த தொகை ரூ. 255.

I. Prize (255÷2) + 0-8-0 = 128 மீதியுள்ள ரூ. 255—128=**127** ரூ. II. Prize (127÷2) + 0-8-0 = 64-0-0. மீதி தொகை 63 ரூ. III. Prize (63÷2)+0-8-0= 32-0-0. மீதி தொகை 31 ரூ. IV. Prize (31÷2)+0-8-0= 16-0-0. மீதி தொகை 15 ரூ. V. Prize (15÷2)+0-8-0= 8-0-0. மீதி தொகை 7 ரூ. VI. Prize (7÷2) + 0-8-0 = 4-0-0. மீதி தொகை 3 ரூ. VII. Prize (3÷2) + 0-8-0 = 2-0-0. மீதி தொகை 1 ரூ. VIII. Prize (1÷2) + 0-8-0 = 1-0-0. மீதி———Ans.

1. திருச்சி பாடிசன் லேபர் ஸ்கூல்

ஷை சங்கத்தின் இரண்டாவது கூட்டம் 11–10–41-ல் லேபர் அட்வைசரி போர்டு மெம்பர் திரு. A. M. J. தனசாமி பிள்ளை B.A., B.L. அவர்கள் தலைமையின்கீழ் கூடிற்று. அவ்வமயம் ஜூனியர் டெப்யூடி இன்ஸ்பெக்டர் திரு. V. D. பிச்சை பிள்ளை B.A., L.T. அவர்கள் "பெற்ருேர் கடமை" என்னும் விஷயத்தைப்பற்றியும், Mrs. ஜெயாபிச்சைபிள்ளை அவர்கள் "பெண் கல்வி" என்பதைப்பற்றியும் விஸ்தாரமாய் சொற்பொழிவாற்றினர். பாடசாலைச் சிறுவர்களும் சிறுமிகளும் பற்பல ஆடல் பாடல்களை நடத்திக்காட்டினர். பின்னர், ஷை பாடசாலை செய்துவரும் வேலையைப் புகழ்ந்தும், இன்னும் அஃது முன்னேறவேண்டியதைப்பற்றியும் எடுத்துக்கூறிய தலைவர்கட்கு, காரியதரிசியவர்களால் நன்றிசெலுத்தப்பட்டதோடு ஷை வைபவம் இனிது நிறைவெய்தியது

S. M. Chockalingam.

2. **பெற்றேர் தினம்** St. Peter's R. C. Boys School, Vadakkur, Tuticorin.

[P. அடைக்கலசாமி & N. இராமசாமி காரியதரிசிகள்]

22–10–41-ல் ஷை பாடசாலை மண்டபத்தில் திரு. அகுஸ்தீன் பெர்னண்டெஸ் (Municipal Counciller & President Panchayat Board, Tuticorin) அவர்களது தலைமையின்கீழ் ஷை வைபவம் நடைபெற்றது. அவ்வமயம் திரு. M. V. ஆர்தர் (Supervisor R. C. Schools) அவர்கள் "ஆசிரியருடன் பெற்ருேர் ஒத்துழைத்தல்" என்னும் விஷயமாய் இனியதோர் சொற்பொழிவாற்றினர். மாணவர்கள் தங்கள் ஆடல் பாடல்களால் அனைவரையும் மகிழ்வித்தனர். மேலும் "பிரேம் குமார்" என்னுமோர் நாடகத்தையும் சிறுவர்கள் நடத்திக்காட்டினர். கடைசியாய்த் தலைவர்களுக்கும் விஜயம் செய்திருந்த கனவான்களுக்கும் திரு. பிரான்ஸிஸ் ஆபரணம் அவர்களால் நன்றிகூறப்பட்டதுடன் ஷை வைபவம் பூர்த்திபெற்றது.

3. சாத்தரசன்பட்டி R. C. **பாடசாலை வருடாந்திரக் கோண்டாட்டமும் பெற்றேர் சங்கமும்.**

1–11–41 இன்று, ஷை ஆண்டு நிறைவிழா ஷை பாடசாலை மானேஜர் சங். G. அல்போன்ஸ்நாதிர் அவர்களின் அக்கிராசனத்தில் நடைபெறலாயிற்று. மாணவர்களும் மாணவிகளும்

பற்பல இனிய ஆடல் பாடல், கும்மி, கோலாட்டங்கள், சம்பாஷணைகள் முதலிய செய்கைகளால் எல்லோரையும் சந்தோஷித்தனர். அவர்களில் திறமைவாய்ந்தவர்கட்குப் பரிசுகள் அளிக்கப்பட்டன. சபாநாயகர் அவர்கள் பெற்றோர்களின் கடமைகளைப்பற்றி விரிவாகப் பேசிமுடிக்க, அன்னவர்க்கும் ஆங்குக் கூடியிருந்த சகலர்க்கும் பாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு. A. S. Lourdu Pillai அவர்கள் நன்றிகூற ஷை கொண்டாட்டம் வெகு விமரிசையாய் நடைபெற்றது.

A. Alexander.

4. முசிரி தாலுக்கா காட்டுப்புத்தூர் பாடசாலை பெற்றோர் சங்கம்.

2–11–41 உ எம்மூர் பாடசாலைக்கு எதிரே அமைக்கப்பட்ட சிங்காரக் கொட்டகையில் ஷை சங்க மாதாந்திரக் கூட்டம் நடைபெற்றது.

அவ்வமயம் ஷையூர் ஜமீன்தார் உயர்தரப் பாடசாலை தமிழ் வித்வான் S. R. மாணிக்கம்வாசகம் பிள்ளை அவர்கள் தலைமை வகித்தார். 5-வது வகுப்பு மாணவர்களான, பூசாரி, சவரிமுத்து என்பவர்களால் கடவுள்வாழ்த்துப் பாடப்பட்டது. ஆதிதிராவிட வாலிபசங்க காரியதரிசி K. ஷண்முகம் ஒற்றுமை என்பதைப்பற்றி விரிவாகப்பேசினர். லேபர் பாடசாலை தலைமை ஆசிரியர் S. வெங்கிடாசலம் அய்யர் பெற்றோர் கடமை என்பதைப்பற்றி விளக்கமாகக் கூறினர். உதவி ஆசிரியர் வீ. பிச்சைமுத்து, பெண்களின் கல்வி அவசியம் என்பதைப்பற்றி தெளிவாகப் பேசினர். 3-வது வகுப்பு மாணவிகளான R. மூக்காயி பி. மீனாக்ஷியம்மாள் K. பெருமாயி இவர்களால் கல்வியின் பெருமை பாடப்பட்டும் சில மாணவிகளால் கோல் ஆட்டம் ஆடப்பட்டும் காண்பிக்கப்பட்டது.

பின்பு ஆதிதிராவிட வாலிப சங்க காரியதரிசியும் ஷை பெற்றோர்சங்க உபத்தலைவருமான K. ஷண்முகம் என்பவரால் கொண்டுவரப்பட்ட தீர்மானம் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டு தலைவர் முடிவுரைக்குப்பின் காரியதரிசியால் வந்தன உபசாரம் கூறப்பட்டு கற்கண்டு சர்க்கரை சந்தனம் பழம் தாம்பூலம் வழங்கப்பெற்று இராஜவாழ்த்துடன் இரவு 10 மணிக்கு கூட்டம் இனிது கலைந்தது.

கா. ஆ. மருதவீரன், காரியதரிசி.

பிலிக்ஸ் தாயார்

பிலோமினாள் பெண்பாடசாலையின் மானேஜரும் பெரிய
தாயாருமான பி
லிக்ஸ் தாயாரம்மையார் அவர்களுக்கு 20–12–41 அன்று
நடந்த விழாவினி லி
க் கண்கள் கண்ட காட்சியினை என்னென்று எடுத்து
இயம்புவேன் பிலி க்
ஸ் என்னும் சம்மனசுவின் புகழைக் கேட்டேனாயின் ;
நான் கண்டதை இங்கு பிர ஸ்
தாபிக்கத்தயாராக இருக்கிறேன். அப்பெயர் இவ்வம்மை
யாருக்கே தகுந்ததேயாகும். தா
யார் என்ற பெயர் படைத்தவர் இவர்கள் போன்றல்லவோ
நடக்கவேண்டும். யா
ர் என்ன சொன்னபோதிலும் ; இப்பேரன்னையின்
அருங்குணமும், பிறர்
நீதியோடு வாழக்காட்டும், வழிகாட்டித் தன்மைகளை
ஒப்புக்கொள்வர். அவர் நீ
டூழி வாழ ஆண்டவனை வேண்டுகின்றனன். திண்டிமா
நகரில் கஷ்டப்பட் டூ
ழியம் செய்யும் ஏழைகளின் குழவிகளுக்கு ஆஸ்பத்திரி
வைத்து நடத்தும் தாயேவா ழி
வாழ்க்கையில் பெண்களின் தன்மையை விளக்கிக்காட்டி
வரும் அருந்தாயே வா
ழ்க ! தாங்கள் எம்போன்ற ஏழைகளைக் காப்பாற்ற
இன்றும் பல கால் உலகில் வா ழ்
க ! பிலிக்ஸ் என்னும் பெரிய தாயார் நீடூழி வாழ்வாரா க !

A. Appasami, Teacher,
S. M. Girls School,
Tindivanam.

நம் பாடசாலை நிகழ்ச்சிகள்

11–11–41. இன்று நம் பாடசாலைச் சாரணர்களின் (Scouts) வருடாந்திர விழா எம் தலைமை ஆசிரியர் சங். A. Lourduswami B.A., L.T. அவர்களின் தலைமையின்கீழ் நடைபெற்றது. அவ்வமயம் புதுச் சாரணர்களைச் சேர்க்கும் சடங்கும் வெகு உற்சாகத்துடன் நிறைவெய்தியது. ஷெ விழாவில் சாரணர் கொடியேற்றம், சங்கீதம், முதலுதவிபுரிதல், துப்பறிதல் முதலிய சாரண இயக்க வேலைகளும், "சாரணரது கடமைகள்" என்ற தலைவரது சொற்பொழிவும் கண்ணுற்றவரின் உள்ளத்தைக் கவர்ந்தன.

* * *

13–11–41. இன்று அர்ச். ஸ்தனிஸ்லாஸ் கோஸ்காவின் திருநாளாதலால் எமது பாடசாலையில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் அர்ச். சகாயமாதா சபையார் யாவரும் காலை $5\frac{1}{2}$ மணிக்கு திவ்விய பலி பூசை கண்டு ஒப்புக்கொடுத்தார்கள். பகற்போஜனத்திற்குப்பின் மாலை 3 மணிக்கு அர்ச். ஸ்தனிஸ்லாஸ் கோஸ்காவின் பேரால் எமது சபை டைரக்டராகிய Rev. Fr. A. Lourduswamy B.A., L.T. அவர்கள் அக்கிராசனத்தின்கீழ் வெகு அழகாய்ச் சிங்காரிக்கப்பட்ட மேடையில் ஓர் பொதுக்கூட்டம் நடந்தேறியது. அவ்வமயம் பல பாட்டுகளும் பல இனிய சொற்பொழிவுகளும் நிகழ்த்தப்பட்டன. இறுதியாகப் "பூசையின் மகத்துவம்" என்னும் சிறியதோர் நாடகமும் அதிவிமரிசையாய் நடத்திக்காண்பிக்கப்பட்டது. எல்லாம் முடிந்ததும் கனம் சங். சுவாமியவர்கள் எம்முடைய பற்பல கடமைகளைப்பற்றி வெகு அழகியதோர் பிரசங்கமாரி பொழிந்தனர். கடைசியாக பரிசுத்த பாப்பாண்டவர் வாழ்த்துதலோடு கூட்டம் இனிது முடிவடைந்தது.

18–11–41 & 21–11–41 etc., தேதிகளில் நமது பாடசாலை "ரேடியோ" மூலமாய் கல்வி சம்பந்தமான நிகழ்ச்சிகள் நம் மாணவர்களின் பொருட்டு ஒலிபரப்பப்பட்டது.

பாலர் ஸங்கீதம்

A. Gnanadickam, *Music Teacher.*

பாலர் விளையாட்டு

நடைப்பழக்கம் :—ஒற்றை வரிசையிலிருந்து பிரிந்து இரு வரிசைகளும், அதிலிருந்து 4 வரிசைகளுமாகப் பிரிந்து நிற்கப்பழக்குதல்.

நோட் மெட் 29. ஆதி.

பல்லவி

ஆடப் போவோம் எழுந்து அன்பரே சூழ்ந்து
அதியுற்சாகமாய் மனந் தெளிய.

சரணம்

1. வரிசைக் கிரம வாட்டம் உயரம்
சரிவர நிற்போம் படிப்படியாய்...... (ஆடல்.)
2. தலைநேர் நிமிர்ந்தும் தடபுயம் விரிந்தும்
கலையா இடம் வலம் கால் வைப்போம்...... (ஆடல்.)
3. ஒருவர் இடம்வே றொருவர் வலமும்
வர பிரி வோம்நேர் இருவரிசை...... (ஆடல்.)
4. இருவர் இடமும் இருவர் வலமும்
பிரிந்து நாம்சேர் வோம் சதுர்வரிசை...... (ஆடல்.)

பல்லவி

பாதா பாமா காரீ ஸா ; ரீகா ரீஸா நீதா பா ;
ஆடப் போவோம் எழுந்து ; அ்ன்பரே சூ்ழ்ந்து ;
பாதா பாமா காரீ ஸா ; தாதா நீநீ ஸா ; ஸா ;
அதி யுற்சா க மாய் மனந் தெ ளிய ; ˙ ;

சரணம்

காகா மாரீ கா ; கா ; காகா மாரீ கா ; கா ;
வரி சைக்கி ர ; ம ; வா ட்டம்உ ய ; ரம் ;
மாதா பாமா காரீ ஸா ; தாதா நீநீ ஸா ; ஸா ;
சரி வர நிற் போம் படிப் படி யாய் ˙ ;

குறிப்பு :—பல்லவியும் சரணத்தின் 4 அடிகளையும் பாலர் மனதில் நன்ருய் இராக தாளம் அமைந்து பாட அப்பியசித்தல். ஒவ்வொரு அடி முடிந்த உடன் பல்லவி பாடுதல்.

உபாத்தியாயர் தெரிந்துகொண்ட பிள்ளைகளை உயரத்திற்குத் தகுந்தாப்போல் அமைத்து ஒன்று முதல் கடைசிப் பையன் வரையில் ஒவ்வொருவருக்கும் ஓர் எண் கொடுத்தும் நிற்க வைக்கலாம்.

இந்த எண் மாருமலிருக்கும்படி அவர்களை பற்பல சமயங்களில் ஒரேவிதமாய் நிற்கும்படியும் செய்து பழக்குதல்.

விளையாட்டுக்கு மணி அடித்தவுடன் உபாத்தியாயர் ஏதேனும் ஓர் குறிப்புக் காட்டவேண்டும். உடனே பாலர் யாவரும் கலந்து பல்லவி பாடிக்கொண்டு குறிப்பிட்ட இடத்துக்குவந்து சேரவேண்டும்.

முதல் சரணம் பாடும்போது பிள்ளைகளின் தலை உயரத்துக்குச் சரியாய் சரிவாக வரவேண்டுமாதலால் அவரவர்களுக்குக் குறிப்பிட்ட எண் முறைப்பிரகாரம் நிற்கவேண்டும். பல்லவியும் பாடவேண்டும். இப்பொழுது இடம் வலம் சரியாய் கால் எடுத்து யாவரும் ஒரே சமயத்தில் வைத்து நடந்துகொண்டு இரண்டாவது அடியைப் பாடிக் கொண்டே 1 முதல் 2 என்ற கோடு அமைக்கப்பட்ட விளையாடும் இடத்துக்குப் போகவேண்டும்.

3-வது சரணம் பாடும்பொழுது 2 என்ற இடத்துக்கு வந்தவுடன் முதல்வன் இடதுபுறமும், இரண்டாவது பையன் வலதுபுறமாகவும் இவ்விதமே மாறி மாறிப் பிரிந்து 3, 4 என்ற இடம் வந்தவுடன் A, B என்ற கோட்டின் சமீபம் வந்து 5-6 என்ற கோட்டின்மேல் இருவர் இருவராகச் சேர்ந்து நடந்து 6 என்ற இடத்திற்கு வந்தவுடன் முதல் இருவரும் 7-க்கும், பின்வரும் இருவர் 8-க்கும் நடந்து C, D என்ற இடம் வந்து திரும்பி 9-வது எண் இடம் போல் 4 பேர் சேர்ந்து நிற்குதல். இது சந்தர்ப்பம் 4-வது சரணம் பாடி பல்லவி பாடவும். நான்கு வரிசைகள் ஆனபின் ஒவ்வொரு வரிசைக்கும் ஓர் எண் பெயரிட்டு, ஒவ்வொரு கட்சியைப் பிரித்து விளையாடவைக்கலாம். விளையாட்டு முடிந்தவுடன் முன்போலவே பாடிக்கொண்டு இறுதியில் 4 வரிசைகள் ஆனவுடன் வகுப்பிற்குப் போகச் செய்யலாம். வரிசையில் நடக்கும்போது பாலர் முறையே கால் எடுத்து வைக்கும் அப்பியாசத்தை தவறவிடாமல் பார்க்கவேண்டும்.

யோசனுவிருத்திச் செய்யுள்

நடுவெழுத்தலங்காரம்

(S. E. Arul Raj)

திருமரியின் அருளினல் அன்புடன்
செப்பிட்டேன் நடுவெழுத்தின் அலங்கலொன்று;
தாவர ரஸத்தை உறிஞ்சுமோர் புழுவின் பெயரும்,
மலையிலிருந்து தடதடவென முழவிப் பொழிவதின் பெயரும்,
ஆதரையில் மாந்தர் வளர்க்கும் பக்ஷி பெயரும்,
அப்பக்ஷியைப் பிடித்து வதைக்கும் பூச்சிப்பெயரும்,
நம்தேயத்தில் வழங்குமோர் பாஷை பெயரும்,
நலமில்லா மண்வகையிலொரு பெயரும்,
வஞ்சித்துச் சிம்மாசனம் பெற்ற முகம்மதிய வீரர் பெயரும்,
சோதரரே நவின்றிடுவீர், நடுவெழுத்தைக் கூட்டிச்சேர்க்கின்
அறியதோர் சிறந்த நூலின் ஆசிரியராவார்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
124460

எலிமெண்டரி பாடசாலைகளுக்கு ஏற்ற
சங்கீத பாட புத்தகங்கள்

1. பால சங்கீத வாசகம் முதல் 3 வகுப்பு மாணவர்களுக்கு ... 0—4—6
2. பால சங்கீத வாசகம் ஆசிரியர்களுக்கு ... 0—6—6
3. கர்னாடக சங்கீத போதினி (முதல்பாகம்) ஆசிரியர்களுக்கு... 0—6—0
4. கர்னாடக சங்கீத போதினி (2-ம் பாகம்)
   1 முதல் 5 வகுப்பு கிறிஸ்துவ மாணவர்களுக்கு ... 0—6—0
5. கர்னாடக சங்கீத போதினி (3-ம் பாகம்)
   6 முதல் 8 வகுப்பு கிறிஸ்துவ மாணவர்களுக்கு ... 0—6—0

விலாசம் : **A. GNANADICKAM,**
South Indian Music School, St. Thomas Church Rd.,
OOTACAMUND.

OUR EMPLOYMENT BUREAU

for

Managers of Schools in need of Trained Teachers	⇕	Trained Teachers in need of Employment

The following Managers are in need of trained teachers in their Schools. Applications may be sent direct to their Addresses.

கீழ்கண்ட மானேஜர்களுக்குப் போதனாமுறை பயின்ற உபாத்திமார்கள் தேவை. வேலையில்லாத உபாத்திமார் அன்னவர்களுக்கு நேராகவே மனுக்கள் சமர்ப்பித்துக்கொள்ளக் கடவர்.

Secondary Trained Teachers :

The Little Flower H. E. School, Teresapuram,
Sriperumbudur P. O., Chingleput Dt.

The Trained Teachers are instructed to open new schools in about 19 School-less centres in the Trichinopoly Range. Additional particulars may be obtained from the Deputy Inspector of Schools, Trichinopoly.

திருச்சினாப்பள்ளி ஜில்லா, முசிரிதாலுக்காவில் அநேக எயிடெட் பாடசாலைகளுக்குப் போதனாமுறை பயின்ற ஆசிரியர்கள் தேவையாயிருப்பதால், போதனாமுறை பயின்று வேலையில்லாத ஆசிரியர்கள் முசிரி ரேஞ்சு டிப்டி இன்ஸ்பெக்டரவர்கட்கு மனுச்செய்துகொள்ளுமாறு விரும்பப்படுகிறது.

Reg. No. M. 1534.

போதன விஷய பூங்கொத்து
காரியாலயம்

பழைய சஞ்சிகைகள்

பூங்கொத்து வருஷ இதழ்களை ஒன்ருகச்சேர்த்து உபாத்திமார்களுக்கும், பாடசாலைகளுக்கும் எப்பொழுதும் உதவும்வண்ணம் புத்தகமாக பைபிண்டிங் செய்து அநேகர் வைத்துக்கொள்ளுகிருர்கள். அன்னவர்கள் பழைய தனி சஞ்சிகைகள் தேவையானபோது, பிரதி ஒன்றுக்கு ஒன்றரை அணு வீதம் அனுப்ப வேண்டும். எங்களிடம் எல்லாப் பிரதிகளும் அகப்படா. வேண்டிய பத்திரிகைகளின் எண்ணைக்குறித்து அனுப்பினல் தேடிப்பார்த்துக் கிடைத்தால் அனுப்புவோம்.

சந்தா நேயர்கள்

பூங்கொத்து காரியால்யத்திற்கு மணியார்டர் செய்யும் அன்பர்கள் தயவுசெய்து தங்கள் முழு விலாசத்தையும், சந்தா எண்ணையும் தெளிவாகக் கூபனில் எழுதினல் நலமாக இருக்கும். அவ்வாறு எழுதாமையால் பலவித அசௌகரியங்கள் நேர்கின்றன.

விலாச மாறுதல்கள்

சந்தா நேயரில் சிலர் தங்கள் விலாச மாறுதலை முதலில் தெரிவியாமல் பத்திரிகை கிடைக்கவில்லை என்று எழுதுகிருர்கள். விலாச மாறுதலை 10-ம் தேதிக்குள் தெரிவிப்பது நலம்.

பத்திராதிபர்.

Printed by Rev. Fr. A. Susai Regis,
Superintendent, St. Joseph's Industrial School Press, Trichinopoly.